மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.147/2021

வாக்குமூலம்: வா.சா.1–சின்னத்துரை

07.06.2023: சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமானத்தின்பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை:– 1) நான் ஆறாம் வகுப்பு படித்துள்ளேன். பாதை சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். குப்பணக்கவுண்டர் எனது தகப்பனாரை பெற்ற தகப்பனார். அவருடைய இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்துக்கள் குப்பணக்கவுண்டருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பட்டாவில் எனது தகப்பனார் பெயர் மட்டும் உள்ளது என்றும், எனது முன்னோர்கள் பெயர் இல்லை என்றும் சொன்னால் சரிதான்.

2) புல எண்.55/8 மற்றும் 55/7 ஆகிய சொத்துக்களுக்கு உண்டான பாதையை பொறுத்து மட்டுமே வழக்கு என்றால் சரிதான். புல எண்.55 ஆனது 1 முதல் 16 வரை உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பிராதிலோ, பிராதின் சொத்து விபரத்திலோ தாவா பாதை எந்த உட்பிரிவு எண்ணுக்கு உட்பட்டு வருகிறது என்பதை விபரமாக சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா பாதையின் அளவு விபரங்கள் குறிப்பாக சொல்லவில்லை என்றால் 12 அடி அகலம் கொண்டதாகும்.

(பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுக்கோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.)

N GNANASAMBANDAM

Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.06.07 18:03:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.